# HSBC கொடுப்பனவு மீட்பு நடைமுறை பற்றிய முக்கிய தகவல்கள்

HSBC 05 வெளியிடக் கடன் சேகரிப்பு நிறுவனங்களை தனது கடன் மீட்புக்காகச் சேவைக்கு அமர்த்தியுள்ளது. எமது உலகளாவிய செயற்பாட்டு முறைமைக்கு அமைவான நிபந்தனைகள் மற்றும் தொழில்சார் அறிவின் அடிப்படையிலேயே இந்த நிறுவனங்கள் தெரிவு செய்யப்பட்டன.

HSBC உயர்ந்த சேவைத் தராதரங்களைப் பேணுவதுடன், இத் தொழிற்றுறையில் தொடர்ந்து முன்னணி வகிக்க விரும்புகிறது. ஆகவே, உயர்ந்த தராதரங்களைப் பின்பற்றுவதற்காக இந்த நிறுவனங்களுக்குக் கண்டிப்பான "ஒழுக்க நெறிகள்" வழங்கப்பட்டுள்ளன. இந்த சிறுவனங்களினால் வழங்கப்படும் சேவைகள் தொடர்ச்சியான மதிப்பீடுகளின் மூலம் கிரமமாகக் கண்காணிக்கப்படுகின்றன. அத்துடன், சேகரிப்பு முகவர்கள் வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட வரையறைக்குள் செயற்படுவதை உறுதிப்படுத்துவதற்காக சேகரிப்பு ஒழுக்க நெறி சம்பந்தமாக அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்கப்படுகின்றது.

அதிகாரமளிக்கப்பட்ட நிறுவனங்களின் சார்பில் பணியாற்றும் சகல முகவர்களும் உங்களுக்குப் பின்வரும் சேவைகளை வழங்குவார்கள்:

(1) உங்கள் வருமதிக் கணக்குகளின் பேரிலான தீர்ப்பனவுத் திட்டங்கள்

(2) தீர்ப்பனவுக் காலத்தில் இடைநிலை ஆளாகச் செயற்படுதல்

(3) உங்கள் வருமதிக் கணக்குகளை சிறப்பாக முகாமைத்துவம் செய்வது குறித்து ஆலோசனை வழங்குதல். இச் சேவை மூன்று மொழிகளிலும் வழங்கப்படும்.

எமது வெளியிடக் கடன் சேகரிப்பு நிறுவனங்களின் பெயர்களும் தொடர்பு விபரங்களும் உங்கள் வசதிக்காக இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

உங்கள் அனுபவத்தைச் சிறப்பாக்க பின்வரும் மேலதிக விடயங்களையும் நினைவில் வையுங்கள்:

(1) முகவர் HSBCயின் பிரதிநிதியா என்பதை உறுதிசெய்யுங்கள்.

(2) பணத்தை அல்லது அதற்குச் சமமானவற்றை ஏற்றுக்கொள்ள முகவர்களுக்கு அதிகாரம் அளிக்கப்படவில்லை. ஆகவே, அவர்களிடம் கொடுபப்னவு எதையும் வழங்க வேண்டாம்.

(3) எமது சகல மூகவர்களும் அதிகாரமளிப்புக் கடிதத்தின் பிரதியொன்றை வைத்திருப்பார்கள். நீங்கள் விரும்பினால் அதனைக் காட்டும்படி கோரலாம்.

(4) முகவரின் செயற்பாடு உங்களுக்குத் திருப்தி அளிக்காவிட்டால், தயவுசெய்து 5388100 என்ற இலக்கத்தினூடாக வங்கியுடன் தொடர்புகொண்டு அது பற்றி அறிவிக்கவும்.

மேலதிக விபரங்களுக்கு கிறெடிட் கார்ட் வைத்திருப்பவர் ஒப்பந்தத்தை நீங்கள் பார்க்கலாம்.